In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.188/2023 நாள் : 12.06.2026

<u>வா.சா.1 (பெரியசாமி) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

எனது பிராதிலும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகளை முழுமையாக புரிந்துகொண்டுதான் அதில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி நவீன்குமார் எனக்கு எப்படி பழக்கம் என்றால் நவீன்குமாரின் அப்பா முத்துசாமி எனக்கு பழக்கமானவர். அவருடன் நவீன்குமாரும் வருவார். அவர்கள் கோழிப்பண்ணை வைத்திருந்தார்கள். அந்த வகையில் எனக்கு பழக்கம். பிரதிவாதி நவீன்குமார் எனக்கு குடும்ப நண்பர் என்றும் பிராதிலும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் எழுத்து மூலமாக கடன் வேண்டும் என கேட்டதுண்டா என்றால் இல்லை. அதேபோல் எந்த தேதியில், எந்த இடத்தில், எத்தனை முறை என்னிடம் வந்து கடன் கேட்டார் என்றால் என்னுடைய வீட்டிற்கு ஒருமுறை வந்து பணம் வேண்டுமென கேட்டார். என்னிடம் பணம் அதிகப்படியாக இருந்ததால் ஏதாவது ஆவணம் எழுதிக்கொடுத்தால் பணம் தருவதாக சொன்னேன். பிரதிவாதிக்கு கடன் கொடுக்க யாராவது பொறுப்பு ஏற்றுக்கொண்டார்களா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு கடன் கொடுக்க யாராவது என்னிடம் சிபாரிசு செய்தார்களா என்றால் இல்லை. நம்பிக்கையின்பேரில்தான் கொடுத்தேன். கடன் கொடுத்தபோது கடன் ஒப்பந்தம் என ஏதேனும் ஆவணம் எழுதிக்கொண்டோமா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு

கடன் கொடுக்க பிரதிவாதியின் வங்கி கணக்கு பட்டியலையோ, வருமான வரிதுறை கணக்கோ கேட்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு அசையா சொத்துக்கள் இருக்கிறதா என்றால் விவசாய பூமி உள்ளது. அதை தெரிந்துதான் கடன் கொடுத்தேன். சுமார் எத்தனை ஏக்கர் நிலம் பிரதிவாதிக்கு உள்ளது என்றால் எத்தனை ஏக்கர் என்பது எனக்கு தெரியாது. தாவா கடனை கொடுப்பதற்கு முன்பு நான் நிபந்தனை ஏதேனும் விதித்தேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடம் பணம் கொடுத்தவுடன் அதற்காக ரசீது ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் பிரதிவாதியின் வங்கி கணக்கையோ, வருமான வரி கணக்கையோ, கடன் ஒப்பந்த பத்திரமோ, ரசீதோ வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தும் நபரா என்றால் இல்லை. நான் இந்த பிரதிவாதியின் சித்தப்பா மற்றும் சகோதரி மதுபிரியா ஆகியோர்களுக்கு புரோநோட்டு கடன் கொடுத்ததாக கூறி வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் வேறு நபர்கள் மீதும் புரோநோட்டு கடன் கொடுத்ததாக வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 28.12.2022ல் பிரதிவாதிக்கு ரூ.20,00,000/- கொடுத்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றும், 20.12.2022 அன்று பிரதிவாதியின் சகோதரி மதுப்பிரியா என்பவருக்கு ரூ.15,00,000/- கடன் கொடுத்ததாகவும், 24.12.2022 அன்று பிரதிவாதியின் சித்தப்பா பொன்னுசாமி என்பவருக்கு ரூ.10,00,000/- கடன் கொடுத்ததாகவும் ஆக மொத்தம் ஒரே குடும்பத்திற்கு ரூ.45,00,000/- கடனாக கொடுத்ததாக கூறுகிறேனா என்றால் ஆமாம். 2022ம் ஆண்டில் ஒரே நேரத்தில் ரூ.45,00,000/- கடனாக கொடுப்பதற்கு எனக்கு வருமானமோ,

வசதியோ இல்லை என்றால் சரியல்ல, நான் கடலை வியாபாரமும், தானிய வியாபாரமும் செய்கிறேன். எனக்கு மேற்படி தொழிலின் மூலம் வருமானம் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ரொக்கமாக பணம் வைத்திருந்தேன். எனது பிராதிலும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள கருங்கல்புதூர் என்பது எனது சொந்த ஊர் அல்ல என்றும், என்னுடைய பூர்வீக ஊரில் எனக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், நான் கருங்கல்புதூரில் உள்ள எனது மாமனார், மாமியார் வீட்டுடன் வந்து குடியேறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிறந்தது மட்டைபாறைபுதூர், என் தந்தையார் வாழ்ந்தது கருங்கல்புதூர். நான் பிரதிவாதியிடமிருந்து தாவா கடனை திருப்பி கேட்டு எழுத்து மூலமாக கடிதம் ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு கடனாக தொகை எதுவும் கொடுக்காததால்தான் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்போ, கடிதமோ அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 28.12.2022ல் பணம் கொடுக்கல், வாங்கல் சம்பவம் எந்த இடத்தில், எந்த நேரத்தில் நடந்தது என்றால் காலை 09.00 மணிக்கு என் வீட்டில் வைத்து கொடுத்தேன். 28.12.2022 என்கிற தேதியில் கடன் கொடுப்பதாக யார் முடிவு செய்தது என்றால் பிரதிவாதியாகவே என்னிடம் வந்து கடன் கேட்டார், நான் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு கடன் வாங்கிகொள்ளுமாறு சொன்னேன். பின்னர் பிரதிவாதி பாண்டு எழுதிக்கொடுத்துவிட்டு கடன் வாங்கினார். தாவா பிராமிசரி நோட்டு என்ன நிறத்தில் இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. தாவா பிராமிசரி நோட்டு

அச்சிடப்பட்ட பிராமிசரி நோட்டா, எந்த மொழியில் அச்சிடப்பட்டிருந்தது என்றால் தமிழில் அச்சிடப்பட்டிருந்தது. தாவா பிராமிசரி நோட்டு என்ன நிற இங்க்–ல் அச்சிடப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை. தாவா பிராமிசரி நோட்டை யார் வாங்கி வந்தார்கள் என்றால் பிரதிவாதிதான் வாங்கி வந்தார். தாவா அச்சிடப்பட்ட பிராமிசரி நோட்டில் நிரப்பப்படாமல் இருந்த பகுதிகளை யார் நிரப்பியது என்றால் பிரதிவாதிதான் ஆள் அழைத்து வந்து எழுத வைத்தார். எத்தனை நபர்களை பிரதிவாதி அழைத்து வந்தார் என்றால் எழுதுவதற்கு ஒருவரையும், சாட்சிக்கு ஒருவரையும் அழைத்து வந்தார். பிரதிவாதியுடன் எழுதுபவரும், சாட்சியும் ஒன்றாக வந்தார்கள். தாவா பிராமிசரி நோட்டில் என்ன எழுதினார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 28.12.2022ம் தேதியில் எனது வீட்டில் காலை 09.00 மணிக்கு பிரதிவாதியும், சாட்சிகளும் வந்ததாகவும், என்னுடைய வீட்டில்வைத்து பிரதிவாதிக்கு நான் தொகை கொடுத்ததாகவும் தாவா பிராமிசரி நோட்டை எழுதி பூர்த்தி செய்து அதில் பிரதிவாதி கையொப்பம் செய்ததாக கூறுவது பொய் என்பதால்தான் பிராமிசரி நோட்டின் நிறத்தையும், அச்சிடப்பட்ட இங்க்–ன் நிறத்தையும் என்னால் கூற இயலவில்லை என்றால் சரியல்ல. பள்ளிபாளையத்தை சேர்ந்த முருகேசன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகேசன் என்பவரை எனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கிற்காக அவரை தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பள்ளிபாளையத்தை சேர்ந்த முருகேசனிடம் 2018ம் ஆண்டு நடந்த வேறு பரிவர்த்தனைக்காக பிரதிவாதியால் கொடுத்து வைக்கப்பட்டிருந்த கையொப்பம், ரேகை வைத்த பூர்த்தி செய்யப்படாத பிராமிசரி நோட்டை அவர் பயன்படுத்தாமல் என் மூலம் பிரதிவாதி மீதும், அவர் குடும்பத்தார் மீதும் பணம் கொடுத்ததாக பொய்

வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா பிராமிசரி நோட்டில் என் முன்னிலையில் பிரதிவாதி கையொப்பம் செய்து கைரேகை வைத்தாரா என்றால் ஆமாம். தாவா பிராமிசரி நோட்டிலுள்ள பிரதிவாதியின் கையொப்பங்கள் மற்றும் கைரேகையில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டதால்தான் தடய அறிவியல் துறையினரின் அறிக்கை கோரி நான் இந்த வழக்கில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், பள்ளிபாளையம் முருகேசனுக்கு உதவி செய்வதற்காக பிரதிவாதி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பள்ளிபாளையம் முருகேசன் என்பவர் என்ககு யார் என்றே எனக்கு தெரியாது. என்னிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக அவ்வாறு கூறுகிறார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முந்தைய நாள் வா.சா.2 மற்றும் வா.சா.3–ன் கையொப்பங்களை தாவா பிராமிசரி நோட்டில் பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ளவாறு பிரதிவாதி எனக்கு தொகை கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நவீன்குமாருக்கு டிசம்பர் 2022ம் ஆண்டில் 29 வயது என்றும், அவர் திருமணமாகாதவர் என்று சொன்னால் சரிதான். நாளது தேதிவரை பிரதிவாதி நவீன்குமார் திருமணமாகாத தனிநபராக வாழ்ந்து வருகிறார் என்றால் அவர் அவருடைய தந்தையாருடன் ஒரே குடும்பமாகத்தான் உள்ளார். பிரதிவாதி நவீன்குமார் என்ன படித்துள்ளார், அவர் டிசம்பர் 2022ம் ஆண்டில் என்ன தொழில் செய்து கொண்டிருந்தார் என்றால் நான் பணம் கொடுத்தபோது கோழிப்பண்ணை பார்த்து கொண்டிருந்தார். அதற்காகத்தான் கடன் வாங்கினார். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதி

நவீன்குமார் பி.இ., படித்துள்ளார் என்றும், டிசம்பர் 2022ம் ஆண்டில் பிரதிவாதி திருப்பூரில் உள்ள தனியார் பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. தனியார் பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வந்த பிரதிவாதி நவீன்குமார் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.188/2023 நாள் : 12.06.2026

<u>வா.சா.2 (சுரேஷ்குமார்) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானதா என்றால் ஆமாம். நான் 12–ம் வகுப்புவரை படித்துள்ளேன். நீதிமன்றத்தில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய என்னிடம் யார் கேட்டார்கள் என்றால் வாதி என்னிடம் கேட்டார். வாதி பெரியசாமியை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் முப்பது ஆண்டுகளாக தெரியும். 28.12.2022 அன்று எத்தனை மணிக்கு, என்னை யார் அழைத்தார்கள், நான் எங்கு சென்றேன் என்றால் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நானும், பிரதிவாதியும் கடையில் பார்த்து பேசிக்கொண்டிருந்தபோது கடன் வாங்கப்போவதாகவும் அதற்கு சாட்சி கையொப்பம் போடுமாறு என்னை அழைத்தார். பிரதிவாதி நவீன்குமார் எனக்கு எப்படி தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதி என்னுடைய வீட்டிற்கு வந்துள்ளார். நானும் அவருடைய வீட்டிற்கு சென்றுள்ளேன். அதனால் எங்களுக்குள் பழக்கம். எனக்கு பிரதிவாதியை தெரியாது என்றும், நான் அவருடைய வீட்டிற்கோ, அவர் என்னுடைய வீட்டிற்கோ வந்தததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 28.12.2022 அன்று பெரியசாமி வீட்டிற்கு காலை 09.00 மணிக்கு சென்றேன். நான் தனியாகத்தான் சென்றேன். நவீன்குமார் அங்கு இருந்தார். அப்போது என்ன நடந்தது என்றால் நவீன்குமார் ஒரு புரோநோட்டு பேப்பரும், ஒரு ஸ்டம்ப்ம், ஒரு ஸ்டேம்ப் பேடும், பேனாவும் கொண்டுவந்திருந்தார். அதில் செந்தில் ராஜாவை பூர்த்தி செய்யுமாறு

சொன்னார்கள். பெரியசாமியும், நவீன்குமாரும் சொன்ன விவரங்களை அவர் பூர்த்தி செய்தார். அதன்பின்னர் ஸ்டேம்பின் மீது ஒரு கையொப்பமும், அதற்கு அருகில் ஒரு கையொப்பமும் செய்து ரேகையும் வைத்தார். பின்னர் அந்த பிராமிசரி நோட்டை நவீன்குமார் பார்த்துவிட்டு பெரியசாமியிடம் கொடுத்தார். பெரியசாமி அதை சரியாக உள்ளதா என பார்த்துவிட்டு பணம் ரூ.20,00,000/–த்தை நவீன்குமாரிடம் பெரியசாமி கொடுத்தார். அதன்பின்னர் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். அதன்பின்னர் எழுதியவரான செந்தில்ராஜா கையொப்பம் செய்தார். பிராமிசரி நோட்டை பெரியசாமியிடம் கொடுத்து, பெரியசாமி ரூ.20,00,000/–த்தை நவீன்குமாரிடம் கொடுத்த பின்னர்தான் நான் பிராமிசரி நோட்டில் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறுகிறேனா என்றால் ஆமாம். செந்தில்ராஜாவால் பூர்த்தி செய்யப்பட்ட பிராமிசரி நோட்டை பெரியசாமியிடம் நவீன்குமார் கொடுத்தபோது என் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பிராமிசரி நோட்டு என்ன நிறத்தில் இருந்தது என்றும், எந்த அளவில் இருந்தது என்றால் அது மஞ்சள் கலந்ததுபோலும், பச்சை நிறம்போலும் இருந்தது. பிராமிசரி நோட்டு என்ன நிற மையினால் அச்சடிக்கப்பட்டிருந்தது என்றால் கருப்பு கலர் மையினால் அச்சிடப்பட்டிருந்தது. அதில் என்னென்ன விவரங்களை செந்தில்ராஜா கையால் எழுதினார் என்றால் பெரியசாமி அவருடைய விலாசத்தை சொல்ல சொல்ல எழுதினார். நவீன்குமார் அவருடைய விலாசத்தை சொல்ல சொல்ல எழுதினார். தொகை எவ்வளவு என சொன்னார்கள். அதையும் எழுதினார். அதன்பின்னர் தேதி எழுதினார்கள். எவ்வளவு வட்டி என எழுதினார்கள். அந்த பிராமிசரி நோட்டில் எனக்கு இடது பக்கத்தில் நான் கையொப்பம் செய்தேன். அதில் என்னுடைய பெயரை எழுதி

விலாசத்தை நான் என் கைப்பட எழுதினேன். செந்தில்ராஜா என்பவர் என்ன எழுதினார் அவரும் பெயர் எழுதி, விலாசம் எழுதினார். அது என்ன நிற பேனாவினால் எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய நாள் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டை எழுதி முடித்தவுடன் சத்தமாக அனைவரும் கேட்கும்படி யாராவது படித்து காண்பித்தார்களா என்றால் எல்லோருக்கும் படிக்க தெரியும் என்பால் அவரவர்களே படித்து பார்த்து கொண்டார்கள். எவ்வளவு தொகை, எவ்வளவு வட்டி என்பதை யார் எழுத சொன்னார்கள் என்றால் வாதி, பிரதிவாதி இருவருமே சொன்னார்கள். பிரதிவாதி கையொப்பம் செய்தபிறகு அதில் பக்கத்தில் அவருடைய பெயரை எழுதியுள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதியின் கையொப்பத்திற்கு கீழ் தேதி போட்டுள்ளாரா என்றால் இல்லை. பிராமிசரி நோட்டில் நான் கையொப்பம் செய்து என்னுடைய பெயர், விலாசம் எழுதியது தவிர நான் வேறு எதுவும் எழுதவில்லை. 28.12.2022 அன்று நவீன்குமார் நாமக்கல்லில் இல்லை என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய நாள் வழக்கறிஞர் அலுவலகத்தில் நான் கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிறைய பிராமிசரி நோட்டு வழக்குகளில் சாட்சியாகவும், எழுதிய நபராகவும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. வாதி முப்பது ஆண்டுகளாக எனக்கு குடும்ப நண்பர் என்பதால் அவருக்கு உதவி செய்வதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 28.12.2022 தேதியில் பிரதிவாதி என்னை அழைக்கவில்லை என்றும், நான் கூறுவதுபோல் வாதி வீட்டில் எந்த

நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நவீன்குமார் என்ன படித்துள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.179/2023 வழக்கில் பிரதிவாதியான பொன்னுசாமி இந்த வழக்கின் பிரதிவாதி நவீன்குமாருக்கு சித்தப்பா என்றால் சரிதான். பிரதிவாதி நவீன்குமார் பி.இ., வரை படித்துள்ளார் என்றும், அவர் டிசம்பர் 2022ம் ஆண்டு திருப்பூர் தனியார் பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. பி.இ., படித்த பிரதிவாதிக்கு அவர் வயதுடைய நபர்களை சாட்சி கையொப்பம் போட அழைக்காமல் என்னை சாட்சி கையொப்பம் போட அழைத்ததாக கூறுவது நம்பத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நவீன்குமார் என்னுடைய நண்பர் என கூறுவது பொய் என்றால் சரியல்ல.

In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.188/2023 நாள் : 12.06.2026

<u>வா.சா.3 (செந்தில்ராஜா) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானது. நான் 12–ம் வகுப்புவரை படித்துள்ளேன். நீதிமன்றத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய யார் என்னிடம் கேட்டார்கள் என்றால் பெரியசாமி அழைத்தார். வாதி பெரியசாமியின் மனைவியும், என் அம்மாவும் சகோதரிகள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், வாதி என்னுடைய சித்தப்பா என்றால் சரியல்ல. 28.12.2022 தேதியில் நான் எங்கு இருந்தேன் என்றால் கருங்கல்பாளையத்தில் இருந்தேன். என் வீடும், வாதியின் வீடும் அருகருகே அமைந்துள்ளது என்றால் ஒருகிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 28.12.2022 தேதியில் நான் சென்னையில் இருந்தேன் என்றும், 25.12.2022 அன்று நான் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு சென்னையிலேயே வேறு வேலைக்காக தங்கிவிட்டேன் என்றும், அதனால் 28.12.2022 அன்று நான் நாமக்கல்லில் இல்லை என்றும், சென்னையில் இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 28.12.2022 தேதியில் யாருடன் எங்கு சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சுமார் இரண்டு நாட்களுக்கு முன்பே நவீன்குமார் என்னை பெரியசாமி வீட்டிற்கு 28–ம் தேதி வரச்சொல்லியிருந்தார். நவீன்குமாரை யார் என்றே எனக்கு தெரியாது என்றும், அவர் என்னை வரச்சொல்லியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நவீன்குமாரை எனக்கு பல வருடங்களாக தெரியும் என நான் எனது முதல்

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். எனக்கு நவீன்குமாரை பத்து ஆண்டுகளாக தெரியும். அவரை பத்து ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 28.12.2022 அன்று நவீன்குமார் சொல்லி நான் எங்கு சென்றேன் என்றால் அன்று காலை 08.30 மணிமுதல் 09.00 பெரியசாமியின் வீட்டிற்கு சென்றேன். அங்குநான் சென்றபோது நவீன்குமார், பெரியசாமி, சுரேஷ்குமார் ஆகியோர்கள் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. நவீன்குமார் கடன் வாங்கப்போவதாகவும், பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்க வேண்டும் என என்னை அழைத்திருந்தார். நான் பிராமிசரி நோட்டை எழுதுவதில் நிபுணத்துவம் பெற்றவரா என்றால் எனக்கு பழக்கம் என்பதால் என்னை அழைத்தார். பிரதிவாதி எனக்கு பழக்கமானவர் அல்ல என்றும், அவர் என்னை அழைத்ததாக கூறுவது இந்த வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தொலைபேசி எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நவீன்குமார் பிராமிசரி நோட்டை வைத்திருந்தார். பிராமிசரி நோட்டில் ரூ.20,00,000/- பூர்த்தி செய்யுமாறு நவீன்குமார் என்னிடம் கேட்டார். அதில் ரூ.1/- ரெவின்யூ ஸ்டேம்ப் ஒட்டப்பட்டிருந்தது. பிராமிசரி நோட்டில் தேதி, தொகை ஆகியவைகளை போட்டு கொடுத்தேன். அதன்பின்னர் நவீன்குமார் அதை வாங்கி படித்துவிட்டு கையொப்பங்கள் செய்து ரேகை வைத்தார். ஸ்டேம்ப் பேடை யார் கொண்டு வந்தார்கள் என்றால் பிரதிவாதியே கொண்டு வந்திருந்தார். பின்னர் பெரியசாமி அதை பார்த்துவிட்டு சரியாக இருப்பதாக கூறி சுரேஷிடம் கொடுத்தார். பாண்டை வாங்கிகொண்டு நவீன்குமாரிடம் பெரியசாமி பணம் கொடுத்தார். அதில் சுரேஷ் கையொப்பம் செய்தார். கடைசியாக எழுயதும்,

சாட்சியும் என நான் கையொப்பம் செய்தேன். எல்லாம் முடித்தபின்னர்தான் தொகை கொடுக்கப்பட்டு அவர் சரியாக இருப்பதாக சொன்னாரா என்றால் ஆமாம். பிராமிசரி நோட்டு என்ன நிறத்தில், என்ன அளவில் இருக்கும் என்றால் லேசான பச்சை நிறத்தில் இருந்தது. அது தமிழில் அச்சடிக்கப்பட்டிருந்தது. என்ன நிற மையினால் அச்சடிக்கப்பட்டிருந்தது என்றால் கருப்பு நிற மையினால் அச்சடிக்கப்பட்டிருந்தது. நான் என்ன நிற மை கொண்ட பேனாவினால் பூர்த்தி செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் பிராமிசரி நோட்டை பூர்த்தி செய்யவில்லை என்றும், பணம் கொடுத்ததையும் பார்க்கவில்லை என்றும், அதனால்தான் மேற்படி விவரங்களை கூற முடியவில்லை என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டு எழுதப்பட்ட பின்னர் அதை எல்லோரும் கேட்கும்படி சத்தமாக படித்து காண்பித்தேனா என்றால் ஆமாம். சாட்சிகள் என எழுதி சுரேஷ் கையொப்பம் செய்தார். நான் அனைத்து விவரங்களையும் தவறாக கூறுகிறேன் என்றும், நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய நாள் வழக்கறிஞர் அலுவலகத்தில் தாவா பிராமிசரி நோட்டில் கையொப்பமிட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா பிராமிசரி நோட்டில் அச்சடிக்கப்பட்ட பகுதியை தவிர மற்ற இடங்களை நான்தான் பேனாவினால் பூர்த்தி செய்ததாக கூறுவது உண்மையா என்றால் ஆமாம். தற்போது நீதிமன்றத்தில் என்னால் வாசகங்கள் எழுதப்பட்டு அதனை தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்து பார்ப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. தாவா பிராமிசரி நோட்டை நான் எழுதவில்லை என்றும், வாதியிடம் பிரதிவாதி கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், வாதி என்னுடைய சித்தப்பா என்பதால் அவருக்கு உதவி

செய்வதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நவீன்குமார் என்ன படித்துள்ளார் என்றால் டிகிரி படித்துள்ளார் என்று தெரியும். அ.வ.எண்.179/2023 வழக்கில் பிரதிவாதியான பொன்னுசாமி இந்த வழக்கின் பிரதிவாதியான நவீன்குமாருக்கு சொந்த சித்தப்பா என்றால் சரிதான். பிரதிவாதி நவீன்குமார் பி.இ., படித்துள்ளார் என்றும், டிசம்பர் 2022ல் திருப்பூர் தனியார் பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. கோழிப்பண்ணைதான் பார்த்து வந்தார். பி.இ., படித்த பிரதிவாதிக்கு அவர் வயதுடைய நபர்களை சாட்சி கையொப்பம் போட அழைக்காமல் என்னை சாட்சி கையொப்பம் போட மற்றும் பிராமிசரி நோட்டு பூர்த்தி செய்ய அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.